REGD. NO. M. 6511 ★ தனி:இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'

புதிய சந்தா விகிதம்

★

மூன்று மாதம்	ரூ. 6
ஆறு மாதம்	ரூ. 12
ஒரு வருடம்	ரூ. 24

தனி இதழ் 7 காசுகள்

இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: சித்திரை 3உ திங்கள் (15—4—57) ★ ★ வெளியூர்: சித்திரை 4உ செவ்வாய் (16—4—57) [இதழ் 263

மாவட்ட மன்றத் தேர்தல்களில் தி. மு. க. ஈடுபடும்?

வழிவகைகள் குறித்து ஆவனசெய்ய பொதுச்செயலாளருக்கு அதிகாரம்

வாக்காளர் பெருமக்களுக்கு பொதுக்குழு பாராட்டு; சட்டசபை தி. மு. க. கட்சிக்கு வரவேற்பு

காஷ்மீர் பிரச்சினையில் வல்லரசுகளின் போக்குக்கு எதிர்ப்பு

அஞ்சல் கட்டணங்களின் அநியாய உயர்வுக்குக் கண்டனம்

தி. மு. கழகப் பொதுக்குழு முடிவுகள்

14-4-57-ல், குளித்தலையில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டத்தில் ஒரேமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் விவரம் இங்கு தரப்படுகிறது :—

1. நன்றியறிவிப்பும்—பாராட்டும்

அண்மையில் நடைபெற்ற பொதுத்தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பெருவாரியான வாக்குகளைத் தந்து ஆதரித்த வாக்காளர் பெருமக்களுக்கும், அத்தகைய ஆதரவைத் திரட்டுவதற்கு உறுதுணையாகயிருந்த கழகத் தோழர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் பொதுக்குழு தனது நன்றியறிதலான பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

—தலைவர்

★

2. சட்டசபைக் கட்சிக்கு வரவேற்பு

அண்ணா அவர்களைத் தலைவராகவும், தோழர் க. அன்பழகன் அவர்களைத் துணைத்தலைவராகவும், தோழர் மு.கருணாநிதி அவர்களை 'கொறடா'வாகவும், தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, எம். பி. சுப்பிரமணியம் ஆகியோரைச் செயலாளர்களாகவும் கொண்டு, 31—3—57 அன்று சென்னையில் நடைபெற்ற தி. மு. கழக எம்.எல். ஏ.—எம்.பி.-க்கள் கொண்ட கூட்டத்தில் அமைக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகச் சட்டசபைக் கட்சியை இப்பொதுக்குழு மகிழ்ச்சியுடன் வரவேற்று ஏற்றுக் கொள்கிறது.

—தலைவர்

★

3. மாவட்ட மன்றத் தேர்தல்கள்

மாவட்ட ஆட்சிமன்றம், நகராட்சி மன்றம், ஊராட்சி மன்றம், ஆகியவற்றிற்கான தேர்தல்களில் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபடுவதற்கான வழிவகை குறித்து ஆவன செய்யுமாறு பொதுச்செயலாளரை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

—முன் : மு. கருணாநிதி
—வழி : எஸ். முத்து

★

4. புதிய காசு: நடைமுறைக்குக் கண்டனம்

ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து அரசியலாரால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள நாணய மாற்று முறையானது புதிய அடிப்படையில் இருப்பது வரவேற்கத்தக்கதெனினும், அதை நடைமுறைக்குக் கொண்டுள்ள விதமானது பொதுமக்களிடை குழப்பத்தை உண்டாக்கி யிருப்பதுடன், ஏழை எளியவர்களுக்கு பெரும் கஷ்ட நஷ்டங்களை விளைவித்திருக்கிறதென்பதை இப்பொதுக்குழு அரசியலாருக்கு எடுத்துக் காட்டுகிறது.

(அ) நாணய மாற்றத்தினால் ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த அரசியலார் முன்கூட்டியே முயற்சி செய்யாதது மட்டுமின்றி, அரசியலாரே அஞ்சல் போக்குவரத்து போன்ற கட்டணங்களை அநியாயமாக உயர்த்தியிருப்பதை இப்பொதுக்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், இம்முறையினால் ஏற்பட்டுள்ள குழப்பங்களைப் போக்குவதற்கும், விலைவாசி ஏற்றங்களைத் தடுக்கவும் அரசியலார் உடனடி நடவடிக்கைகளில் இறங்கவேண்டுமென இப்பொதுக்குழு வற்புறுத்துகிறது.

—முன் : ஏ. கோவிந்தசாமி
—வழி : கி. மனோகரன்
,, காஞ்சி. கல்யாணசுந்தரம்

★

5. காஷ்மீர்: வல்லரசு நாடுகள்போக்கிற்கு கண்டனம்

பல ஆண்டுகளாகவே சிக்கலாக இருந்துவரும் காஷ்மீர் விவகாரத்தில், பாகிஸ்தானை ஊக்குவித்து குழப்பம் விளைவிக்கும் போக்கில் அமெரிக்காவின் தலைமையில் ஐ. நா. சபையும், வல்லரசுகளும் நடந்துகொள்வது உலக சமாதானத்தைக் குலைக்கத்தக்க போக்காகுமோ என்று அஞ்சுவதுடன், வல்லரசுகளின் இப்போக்கை இப்பொதுக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது:

—முன் : ஈ. வெ. கி. சம்பத்
—வழி : சி. பி. சிற்றரசு

★★★★★★★★★★★★★★★★★

அறிவிப்பு

★

புதிய காசு போதிய அளவு கிடைக்கப் பெறாத காரணத்தால், மறுஅறிவிப்பு வரையில் 'நம் நாடு' தனி இதழின் விலை வழக்கம்போல் 1-அணாவுக்கே விற்கப்படும்.

நிர்வாகி : 'நம் நாடு'

★★★★★★★★★★★★★★★★★

குளித்தலையில் தி.மு. கழகப்பொதுக்குழுக்கூட்டம்

தேர்தல் முடிவுகள் குறித்து மாவட்டப் பிரதிநிதிகள் கருத்தறிவித்தனர்

எதிர்காலத்தில் தி. மு. க. மேற்கொள்ள வேண்டிய செயல்முறைகள் பற்றி விளக்கம்

கழக வளர்ச்சியை ஒழுங்குற மேற்கொள்ளுமாறு பொதுச்செயலாளர் வேண்டுகோள்

பொதுத் தேர்தல்கள் முடிவுற்றபின் முதன் முறையாக, தி. மு. கழகப் பொதுக்குழுக்கூட்டம் நேற்று குளித்தலை நகரில் கடம்பர் கோயில் பசுமடத்தில் நடைபெற்றது.

பொதுக்குழுக் கூட்டத்தையொட்டி நகர் முழுதும் வரவேற்பு வளைவுகளாலும், கழகக் கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

கூட்டத்தில் கலந்துகொள்ள மாநிலமெங்கணுமிருந்து உறுப்பினர்கள் 85 பேர் வந்திருந்தனர். குழுவிற்கான எல்லா ஏற்பாடுகளும் வெகு சிறப்பாகச் செய்யப்பட்டிருந்தன.

பொதுக்குழு குளித்தலையில் கூடுகிறது என்ற செய்தி, நகரிலும் சுற்றுப்புறங்களிலிருந்தும் ஏராளமான தோழர்களை கூட்டம் நடைபெற்ற கடம்பர் கோவில் பசுமடத்தில் கொண்டுவந்து சேர்த்திருந்தது.

வரவேற்பு

பல ஊர்களிலிருந்தும் பஸ் இரயில்மூலம் குளித்தலை வந்து சேர்ந்த பொதுக்குழு உறுப்பினர்களை, கழகத் தொண்டர்கள் பலர் வரவேற்று, தங்குமிடம் அழைத்துச் சென்று உபசரித்தனர்.

துவக்கம்

கூட்டம் காலை 10-45 மணியளவில் துவங்கிற்று.

பொதுச்செயலாளர்

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கூட்டத் துவக்கத்தில், கடந்த பொதுத் தேர்தலுக்கு முன் சேலத்தில் நடைபெற்ற பொதுக் குழுக் கூட்டத்திற்குப் பிறகும்—இந்தக் கூட்டத்திற்கும் இடையில் நடைபெற்றக் கழகப் பணிகளை விவரித்துக் கூறினார்கள்.

தேர்தலில் கழகம் பெற்ற வெற்றிகள் குறித்தும், தோல்விகள் குறித்தும் அவர் விளக்கம் தந்துவிட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்தலில் ஏற்பட்ட வெற்றி தோல்விகள் குறித்து கருத்தறிவிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

அதன்படி தோழர்கள் எஸ். முத்து (மதுரை), என். எஸ். இளங்கோ (தஞ்சை), சத்தி

★

பொதுக்குழுக் கூட்டத்திற்கு வர இயலாமையால் தந்தி மூலம் தங்களின் எண்ணத்தைத் தெரிவித்திருந்த பொதுக்குழு உறுப்பினர்கள் :—

சு. வன்னியபெருமாள் —நாஞ்சில் மாவட்டம்
என். இராசகோபால் ,,
நாச்சியப்பன் —தேவபாண்டலம் (தெ. ஆ.)
பி. என். இராமாநுசம் —பொள்ளாச்சி
கே. ஏ. கலையழகன் —மதுரை
எஸ். எஸ். இராசேந்திரன் ,,
எஸ். வி. பதி —பெங்களூர்
கே. கே. நீலமேகம் —குடந்தை
எம். பி. வடிவேலு —முல்லை (வ. ஆ.)
சுப்பிரமணியம் —சங்கரன் கோயில் (நெல்லை மாவட்டம்)
உத்தண்டன் —விருதுநகர்
எம். ஜி. இராமச்சந்திரன் —நியமன உறுப்பினர்

வெற்றி பெற்ற எம். எல். ஏ.-க்கள், எம். பி.-க்கள், பொதுக்குழு உறுப்பினர்களல்லாதவர்கள் ஆகியோர் விசேட அழைப்பின்பேரில் கலந்துகொண்டனர்

(வ. ஆ.), ஏ. கோவிந்தசாமி (தெ. ஆ.), இ. ல. ம. சௌந்திர பாண்டியன் (இராமநாதபுரம்), ஜி. பி. சோமசுந்தரம் (சேலம்), டபிள்யூ. டி. துரைசாமி (நெல்லை), தி. ந. சம்பந்தம் (செங்கற்பட்டு), அன்பில்-தருமலிங்கம்(திருச்சி) ஆகி

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 15—4—57 திங்கள்

வாழ்த்துவோம்!

பரிபூரண சுதந்திரம் பெற்ற நாடுகளின் பட்டியலில் இடம் பெறத் துடிக்கும் சிங்கப்பூருக்கு, சுதந்திரத்தின் முதற்படியான சுயாட்சி வழங்க வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் இணங்கியுள்ளனர்.

இதற்காக, முதன் மந்திரி லிம்யி-ஹாக் தலைமையில் இலண்டன் சென்ற தூதுக்குழுவினர் மகத்தான வெற்றி பெற்றுள்ளனர்.

ஆட்சேபத்திற்குரிய சில நிபந்தனைகளுடன் இந்த சுயாட்சி வழங்கப்படுகிறது என்றாலும், இந்த வாய்ப்பைப் பெற்றுக்கொண்டு, தொடர்ந்து போராடுவதின் மூலம் நிபந்தனைகளை அகற்றிக்கொள்ள முடியும் என்ற விவேகமான முடிவில் முதன் மந்திரி, புதிய அரசியல் சட்டத்திற்கு ஒப்புதல் தந்திருப்பதை, சிங்கப்பூர் மக்கள் முகம் சுளிக்காமல் ஏற்றுக் கொள்வர் என்று எதிர்பார்க்கலாம்.

'சைப்ரஸ்—மத்திய கிழக்கிலும், சிங்கப்பூர்—தென் கிழக்கிலும், பிரிட்டானிய சாம்ராஜ்யம் விட்டுக் கொடுக்கவே முடியாத காவலிகள்— முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ கேந்திரங்கள்: எனவே, அவற்றிற்குச் சுதந்திரம் என்ற பேச்சே கிடையாது, என்ற இங்கிலாந்து நாட்டு அரசியல்வாதிகளின் இறுமாப்பு, இன்று தகர்ந்திருக்கிறது என்றே கருதலாம்.

சென்ற ஆண்டு ஏப்ரல் திங்களில், சிங்கப்பூருக்கு சுதந்திரம் கோரி இலண்டன் சென்ற டேவிட் மார்ஷல், தனது முயற்சியில் தோல்வியுற்றதும் பதவியைத் துறந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அப்போது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கொண்டிருந்த பிடிவாதமும், காட்டிய கண்டிப்பும் இப்போது சற்று தளர்ந்திருக்கின்றன.

அன்னியர் படையெடுப்பிலிருந்து பாதுகாப்பு, வெளி விவகாரங்கள் இவை இரண்டும், சிங்கப்பூருக்கு சுயாட்சி வழங்கப்பட்ட பின்னரும், பிரிட்டிஷார் கையில்தான் இருக்குமாம். ஆனால், சென்ற ஆண்டு மார்ஷல் தோல்வியுற்றதற்குக் காரணம், உள்நாட்டுப் பாதுகாப்பும் பெயரளவில் மட்டும் சிங்கப்பூர் சர்க்கார் வசம் இருக்கலாம்—உண்மையில் பிரிட்டனின் வசமே இருக்கவேண்டும் என்று, பிரிட்டன் அடம் பிடித்ததுதான்!

இப்போது லிம்யி - ஹாக் குழுவினர், இந்தச் சிக்கலுக்குப் பரிகாரம் தேடியுள்ளனர். அதாவது, உள்நாட்டுப் பாதுகாப்பு, வெளிநாட்டுப் படையெடுப்பிலிருந்து பாதுகாப்பு என்ற விவகாரத்துடன் மோதிக் கொள்ளுகிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டால், அப்போது, அந்த நிலையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையைப் பற்றித் தீர்மானிக்க ஒரு குழு நியமிப்பது என்றும், அந்தக் குழுவில் பிரிட்டிஷார் மூவரும், மலாயா சர்க்கார் மந்திரி ஒருவரும் இடம் பெறுவது என்றும் இருதரப்பாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

வெளிநாட்டுப் படையெடுப்பிலிருந்து பாதுகாப்பு, வெளி விவகாரங்கள் ஆகிய முக்கிய பிரச்சினைகள் இரண்டும், வெள்ளையராலேயே கவனிக்கப்படும் என்பதால்—பூரண சுதந்திரம் கிடைக்கவில்லை என்பதால், தடைக்கப்படாமல் மிஞ்சும் அவக்கேட்டினைவிட, இந்த ஏற்பாட்டினால் அதிகமான அவக்கேடு நேர்ந்துவிடாது என்ற பெருநோக்கத்தில், முதன் மந்திரி குழுவினர் இதற்குச் சம்மதித்திருக்கலாம்.

ஆட்சேபனையுடன், குழுவினர் ஒப்புக்கொண்டிருக்கிற மற்றொரு நிபந்தனை, புதிய அரசியல் சட்டப்படி அமைகிற மக்கள் சபையில், நாசவேலையில் ஈடுபட்டிருந்தவர்கள் என்று அறியப்பட்டவர்கள் உறுப்பினர்களாக அமரக்கூடாது என்பதாகும். இது, 'இயற்கையான ஜனநாயகப் பாதையிலிருந்து வழிவிலகிச் செல்வதாகும்' என்று லிம்யி-ஹாக் ஆட்சேபித்துவிட்டு, நிபந்தனையை ஏற்றுக் கொண்டிருப்பதற்குக் காரணம், கிடைத்ததைப் பெற்றுக்கொண்டு, பெற வேண்டியதற்காகப் போராடுவதே, தரப்பட்டுள்ள சூழ்நிலையில் உகந்த வழி என்று அவர் கருதுவதே என்று நாம் கொள்வதில் தவறில்லை.

நிபந்தனைகளுடன்தான் என்றாலும், சிங்கப்பூருக்கு சுயாட்சி கிடைக்க வழி ஏற்பட்டிருப்பது நாளாவட்டத்தில் பூரண சுதந்திரத்திற்கும் வழி செய்யும் — ஏகாதிபத்தியப் பிடிப்பிற்கும் விடை தரும் என்ற நம்பிக்கையில், லிம்யி - ஹாக் குழுவினரை நாம் வாழ்த்துகிறோம்.

கங்கையிலும் படகு விபத்து!

75 பேர் கதி என்ன?

முசாபர்பூர், ஏப். 12—

சென்ற செவ்வாய்க்கிழமை செச்சார் கட்டத்தில் உள்ள சிவன் கோவிலில் வழிபடுவதற்காக 200 பக்தர்கள் ஒரு நாட்டுப் படகில் ஏறிச்சென்றனராம். படகின் ஒரே பகுதியில் பிரயாணிகள் கூடியதும் படகு கவிழ்ந்துவிட்டதாம். பெண்கள், குழந்தைகள் உட்பட அனைவரும் ஆற்றில் மூழ்கிவிட்டனராம். இவர்களில் 125 பேர் காப்பாற்றப்பட்டனர் என்றும், மற்ற 75 பேர்களைப் பற்றிய தகவல் கிடைக்கவில்லை என்றும் செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

உப்பு உற்பத்தி அதிகரிக்குமாம்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில், இந்தியா 10 கோடி மணங்கு உப்பு உற்பத்தி செய்யுமாம்.

தற்போது 8 கோடி மணங்கு உற்பத்தி செய்யப்படுகிறதாம்.

இதில் 6 கோடி மணங்கு உப்பு இந்தியாவில் உபயோகப்படுத்தப்படுகிறதாம்.

சென்ற ஆண்டில் 75 இலட்சம் மணங்கு உப்பு ஜப்பான் 'இந்தோனேஷியா முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாம்.

ஒதுக்கித்தள்ளப்பட வேண்டிய ஆட்சி

தூக்கி எறியப்படாததற்குக் காரணம் என்ன?

சி. பி. சிற்றரசு ஆராய்கிறார்

8—4—57-ல் சென்னை - செம்மண்பேட்டையில், தி. மு. கழகச் சார்பில், தோழியர் சத்தியவாணி முத்து அவர்களுக்கு நடந்த பாராட்டு விழாவில் தோழர் சிற்றரசு ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:—

"இன்று தோழியர் சத்திய வாணிமுத்து அவர்களைப் பாராட்டுவதற்காகக் கூடியிருக்கிறீர்கள்; அந்த அம்மையாரை பாராட்டுவதற்குமுன் அவர்களுக்கு வெற்றியைத் தேடித் தந்த வாக்காளப் பெருமக்களைப் பாராட்டுவது நல்லதென்று கருதுகிறேன்.

"பதினைந்து இடங்கள்தானே வெற்றி - என்பவர்கள், ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். நாம் சாப்பிடும் உணவெல்லாம் இரத்தமாக மாறி விடுவதில்லை. அடிக்கும் காற்றெல்லாம் உயிரினங்களுக்கு மட்டிலுமே பயன்படுவதில்லை. எவ்வளவோ காற்று புயலாகவும், மண்காற்றாகவும், விஷக்காற்றாகவும் போய்விடுகின்றது; அதைப் போலவே பெய்யும் மழையெல்லாம் பயிரினங்களுக்கே பயன்பட்டு விடுவதில்லை. அதே மாதிரிதான், தேர்தலில் நின்ற இடங்களிலெல்லாம் யாருக்கும் வெற்றி கிடைத்து விடுவதில்லை.

அரசியல் - அன்றும் இன்றும்!

"ஒரு ஆட்சியை மாற்ற வேண்டுமானால் சில நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த ஆயுதங்கள் வோட்டல்ல — கொடிய ஆயுதங்கள், கூரிய வாட்கள், 'கோ' என்று கூவிய புரட்சிக் குரல்கள், சிந்திய இரத்தத் தேக்கங்கள், முத்தமிட்ட தூக்குக் கயிறுகள், இருட்சிறையில் வாடிய எண்ணற்றோரின் இதயங்கள்—ஆகிய இவ்வளவும் தேவைப்பட்டன. ஜார், லூயி, சார்லஸ் போன்றோரின் பரிதாப முடிவுகள், இதைப் போன்ற சம்பவங்களால் ஏற்பட்டவைதான்!

"ஆனால், இன்று அந்த நிலையில்லை; அது தேவையுமில்லை. காரணம், ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் இடையே ஜனநாயகம் என்ற புனித ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

"ஆளுவோரை ஆளப்படுவோர் மாற்ற எண்ணினால் கொடிய ஆயுதங்களோ, புரட்சிக் குரல்களோ, இரத்தம் தேக்க வேண்டிய நிலையோ இல்லை. அவ்வளவுக்கும் மேலாக, அவைகளைவிட கூர்மையான ஆயுதம் ஒன்று தரப்பட்டிருக்கிறது. அதுதான் வோட்டு (வாக்குரிமை); அந்த வாக்குரிமைகள் மூலமே ஒரு ஆட்சியை மாற்றிவிடலாம் என்று ஏற்பட்ட பிறகு, அதுவும் யார் யார் ஆட்சியை மாற்ற விரும்புகிறார்கள்—யார் யார் அந்த ஆட்சியே இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்பதுகூட அடுத்தவனுக்கும் தெரியாமல் இரகசியமான முறை வைத்த பிறகுகூட, ஒதுக்கித்தள்ள வேண்டிய ஆட்சி ஒதுக்கித் தள்ளப்படாமலிருப்பதற்கு என்ன காரணம் என்பதை நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

பயந்த குணமுடையவர்கள்

"பொதுவாகவே நம் மக்கள் பயந்த குணமுடையவர்கள்! பெரும்பாலோர் ஆட்சியைப் பற்றித் தெரிந்துகொள்ள முடியாத படிப்பற்றவர்கள்! படித்த சிலரும் எம்முதாயோ என்றிருப்பவர்கள்! 'வாக்குகளைப் பதிவு செய்வதாலே நமக்கென்ன இலாபம்?' என்று, இலாப-நட்டக் கணக்குகளைப் பார்த்துக்கொண்டிருப்பவர்கள்! இவ்வளவுபேரையும்விட்டு மேலே தாண்டிச் சென்றால், சாதிகள் குறுக்கிட்டு, 'நம் சாதிக்காரன்; அவன் வெற்றிபெற வாய்ப்பு இருந்தாலும் இல்லாவிட்டாலும், திறமை இருந்தாலும் இல்லாவிட்டாலும் நம்மவனுக்குத்தான் ஓட்டுப் போட வேண்டும் என்ற சுயநல எண்ணம் வேரூன்றிவிடுகிறது. ஆகவேதான், இங்கே ஆளத்தகுதியுடையவர்களைத் தேர்ந்தெடுப்பது மிகக் கடினமாக இருக்கிறது.

பதினாறு இலட்சம்!

"நாம் வாங்கியிருக்கும் இந்த 16 இலட்சம் ஓட்டுக்களை எதிரிகள் அலட்சியமாகப் பேசலாம்; ஆனால் அவைகள், 'நமது இலட்சியக் கீதத்தின் இன்ப ஒளிக் கதிர்கள்,' என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. நாம் யாரிடம் போரிட்டு இவைகளைப்பெற்றோம்? சுமார் 72 ஆண்டுகளாக இயங்கிக்கொண்டுவரும் ஒரு கட்சியோடு போரிட்டு வாங்கியிருக்கிறோம்; பணப் புயலில் சிக்கி மக்கள் தவித்து, இன்னது செய்வது என்று தெரியாமல், காளை மாட்டு மந்தைகளை நோக்கி ஓடிக்கொண்டிருந்தபோது, அந்தப் பெரும்பயங்கரமான பணப்புயலில் அகப்பட்டுக்கொள்ளாமல், அதட்டலுக்கும்—அச்சுறுத்தலுக்கும் அஞ்சாமல், ஆசைவார்த்தைகளுக்கு அடிபணிந்துவிடாமல், எச்சரிக்கைகளுக்கு ஏமாந்து போகாமல், 'இந்தக் காலம் நமக்களித்த பரிபூரண சுதந்திரச் சின்னமாக விளங்கும் புனிதவாக்குகளை புல்லர்களுக்குப் பயன்படுத்த மாட்டோம்,' என்ற திட மனதோடு கொடுக்கப்பட்ட வாக்குகள் 16 இலட்சம்!

'இவ்வாக்குகள், யாராலும்—எந்த முறையைக் கையாண்டாலும், எந்த நாளிலும் கைமாறாதவையாகும்.

அடுத்த தேர்தலில்;

"அடுத்த தேர்தலில்—என்ற கேள்விக் குறியை நாம் எழுப்பா முன்னம், காங்கிரஸ் வட்டாரத்திலேயே அந்த கிலிக்குறி கிளம்பியிருக்கிறது?

"இந்தத் தேர்தல் சரி; அடுத்த தேர்தலில் ஒரு பணக்காரரை அழைத்தால் வரமாட்டார் போலிருக்கிறதே!—இப்படி ஒரு கேள்வி அங்கே!

"பணக்காரர்கள் வருவதாகவே வைத்துக்கொள்வோம்; அதற்குள் இப்போது படித்துக்கொண்டிருப்பவர்கள் வெளியேவந்து வாக்காளர்களாகப் பதிவு செய்துகொண்டு தி. மு. க.வில் சேர்ந்துவிடுவார்கள்போலிருக்கிறதே!'—இப்படி ஒரு கேள்வி அங்கே!

"உம்; அதற்குள் கிராமங்களுக்கு என்னென்ன செய்யவேண்டுமோ, அதைக் தான் செய்துவிடுவோமே!'—இப்படி மற்றொருவர் கேள்வி!

"ஆமாம்; அண்ணாதுரை தொகுதியில் ஒரு கிராமத்திற்கு அப்படியுந்தான் ஒரு பாதை அமைத்தோம்; ஓட்டுகள் நமக்கு வந்ததா? அவருக்கே (அண்ணா) போய்விட்டது!'— இப்படி ஒருவர்!

"'அதைவிட மகா வெட்கக் கேடு என்ன தெரியுமா? அந்தப் பாதைக்கே 'அண்ணாதுரை பாதை,' என்று வைத்துவிட்டார்களாம்!'—என்று ஒருவர் சொன்னவுடனே, 'ஆ, அப்படியா?'—எல்லோரும் வியப்படைந்தார்களாம்! இப்படி உரையாடல்கள் நடக்கிறதாம் அங்கே!

"இதை எல்லாம் கேட்கும் நீங்கள் பதில் கூறுங்கள்—என்று நான் கூறவில்லை. நீங்களே சிந்தித்து ஒரு முடிவுக்கு வாருங்கள்! யாருக்கு வெற்றி என்பதை உணர்வீர்கள்."

பாகிஸ்தானின் விசித்திர நடவடிக்கை!

'டைம்ஸ் ஆப் இந்தியா' நிருபருக்குக் கல்தா

கராச்சி, ஏப். 12—

இந்தியாவின் பிரபல ஆங்கில தினசரியான 'டைம்ஸ் ஆப் இந்தியா'வின் தனி நிருபர், பாகிஸ்தான் எல்லையைவிட்டு ஏப்ரல் 10-ந் தேதிக்குள் வெளியேற வேண்டும் என்று பாகிஸ்தான் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த நடவடிக்கையை மேற்கொண்டதற்குக் காரணம் எதும் கூறப்படவில்லை.

இவருடன் பாகிஸ்தானை விட்டு வெளியேற்றப்பட்ட எழுத்தாளர்களின் எண்ணிக்கை ஐந்தாகியுள்ளது.

சிங்கப்பூரின் எதிர்காலம்

லண்டன் பேச்சுக்களின் முடிவுகள்

லண்டன், ஏப். 12—

சிங்கப்பூரின் எதிர்காலம் பற்றி பிரிட்டனில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு இரு நாடுகளின் பிரதிநிதிகளும் கையொப்பமிட்டுவிட்டனர்.

உள்நாட்டுப் பாதுகாப்பு பொறுப்பு சிங்கப்பூர் வசமிருக்கும்; வெளிப் பாதுகாப்பு பிரிட்டன் வசம் இருக்கும்.

பிரிட்டிஷ் இராணியின் பிரதிநிதி மலாய் நாட்டைச் சேர்ந்தவராக இருப்பார். முதலமைச்சர் இனி பிரதமர் என்று அழைக்கப்படுவார்.

நிதி மந்திரி, அட்டார்னி—ஜெனரல் போன்ற பதவிகளை இனி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே வகிப்பர். சிங்கப்பூர் குடியுரிமை உருவாக்கப்படும்.

1958-59-ல் நடைபெற இருக்கும் தேர்தலில் நாசவேலைகளில் ஈடுபட்டவர்கள் நிற்கக்கூடாதென்று இந்த உடன்பாட்டில் சேர்க்கப்பட்டுள்ளதாம். இதற்கு சிங்கப்பூர் முதலமைச்சர் லிம்யூ ஹாக் கண்டனம் தெரிவித்தும் பயனில்லாமல் போய்விட்டதாம்.

மேலும், சிங்கப்பூர் அரசியலை நிறுத்திவைக்கும் உரிமையை பிரிட்டன் தன் வசம் வைத்துக் கொண்டுள்ளது. அந்தச் சூழ்நிலையில் பிரிட்டிஷ் ஹைகமிஷனர், அதிகார பொறுப்பை ஏற்று நடத்துவாராம்.

மேலும் சிங்கப்பூரின் வெளிவர்த்தகம், கலாச்சாரம் முதலியவை சம்பந்தமாக எதிர்பார்த்த முடிவுக்கு பிரிட்டன் சம்மதம் தரவில்லை என்று முதலமைச்சர் லிம்யூ ஹாக் தெரிவித்துள்ளார்.

இந்த உடன்பாட்டை சிங்கப்பூர் சட்டசபை ஏற்றுக்கொள்ளுமா என்பதும் சந்தேகத்திற்குரியதென்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆந்திர மாநிலத்தில் பஞ்சப்படி உயர்வு

ஹைதராபாத், ஏப். 12—

ஆந்திர மாநிலத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு மாதம் ரூ. 6 பஞ்சப்படி உயர்வு அளிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பஞ்சப்படி உட்பட ஊழியர்களின் சம்பளம் ரூ. 106-க்கு அதிகப்படக் கூடாது. இதனால், இதுவரை இருந்துவந்த ரூ. 100 வரம்பு மாற்றப்பட்டு ரூ. 106-வரை ஊதியம் பெறுபவர்களுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறது.

குதிரை கீழே தள்ளியது போதாது என்று குழியும் பறித்ததாம்!

மதுரை கம்யூனிஸ்டுகளின் கதையும் அதுதான்!

கழகத் தோழர்கள் தாக்கப்பட்டது குறித்து எஸ். முத்து அறிக்கை

மதுரை நகரில் சமீபகாலமாகக் கம்யூனிஸ்டுகள் நடத்திவரும் பலாத்கார வெறிச்செயல்கள் குறித்து, மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் எஸ். முத்து அவர்கள், கீழ்க்கண்ட அறிக்கையை விடுத்துள்ளார் :—

சமீப காலமாக—குறிப்பாக பொதுத் தேர்தலுக்குப் பிறகு மதுரையில் தங்களுக்கு ஏற்பட்டுள்ள சரிவையும், வீழ்ச்சியையும் கண்ட கம்யூனிஸ்டுகள், வளர்ந்துவரும் தி. மு. கழகத்தின் மீது அசூயையும்-ஆத்திரமும், பொருமையும் கொண்டு கழகத் தோழர்களைத் தாக்குவதும், படிப்பகங்களைச் சேதப்படுத்துவதும், கொடிமரங்களை வெட்டுவதுமான இழிசெயல்களில் திட்டமிட்டு இறங்கியிருக்கின்றனர்.

மதுரையில் சமீப காலமாகக் கம்யூனிஸ்டு கட்சி நடத்திவரும் எல்லைகடந்த பலாத்காரச் செயல்களை மக்கள் கண்ணிலிருந்து மறைக்கும் நோக்குடன் தி. மு. கழகத்தின் மீது பழிசுமத்தி, 'தி. மு. க.-வின் ரௌடித்தனம்' என்ற தலைப்பில் ஒரு துண்டுப் பிரசுரமும் வெளியிட்டிருக்கின்றனர்.

தீர்ப்பு கூறுங்கள் !

ரௌடித்தனம் செய்தவர்கள் யார் என்பதை, ரௌடித்தனம் நடைபெற்ற வட்டாரங்களில் இருந்த மக்கள் நன்ருக அறிவார்கள். ஆனல், மற்ற மக்கள், கம்யூனிஸ்டுகளின் பொய்ப் பிரசாரத்திற்குப் பலியாகாமல் இருக்கவே கீழ்க்காணும் உண்மைகளை இந்த அறிக்கை மூலம் வெளியிடுகிறேன்.

கம்யூனிஸ்டுகளின் பிரசுரத்தில், அண்மையில் நடைபெற்ற ஓர் சம்பவத்தையும், சில ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த பல சம்பவங்களையும் திரித்தும், மறைத்தும் வெளியிட்டுள்ளனர். அந்த முன்னுள் சம்பவங்களை, இந்நாள் நடைபெற்றதைப் போன்று காட்டுவதிலேயே பித்தலாட்டம் செய்துள்ளனர்.

அவர்களது பொய்க் குற்றச்சாட்டுகள்

'அழகாடியைச் சேர்ந்த மாரியப்பன், சண்முகம், இராமன் ஆகியோர் தாக்கப்பட்டனர்,' என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். இந்தச் சம்பவம் எப்பொழுது நடைபெற்றது; எப்படித் தாக்கப்பட்டார்கள் என்பதைக் கூறுகிறேன்.

1955-ல் நடந்த முனிசிபல் தேர்தலின்போது மேலே குறிப்பிட்ட 3 பேரும், 9-வது வார்டில் எனக்காக வேலை செய்த தோழர்கள் சிலரும் வாய்த் தகராறு செய்துகொண்டனர். இருசாராரும் போலீஸ் நிலையத்திற்குச் சென்ருர்கள்; இது, அவர்கள் அகராதிப்படி 'ரௌடித்தனம்!'

2. 'பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக்காரியதரிசியும், துணைக் காரியதரிசியுமான ப. கார்மேகம், கே. பி. பஞ்சாட்சரம் என்ற இரு கம்யூனிஸ்டுகளைத் தடுத்து நிறுத்தித் தாக்க முயற்சித்தனர்' என்பது ஒரு குற்றச்சாட்டு. இதன் விவரமாவது :—

1956-ல் அழகாடியில் ஒரு பெண்ணை ஒருவன் அழைத்துச் சென்றுவிட்டதாகவும், அதற்குக் கம்யூனிஸ்டு பிரமுகர்கள் உடந்தையாக இருந்ததாகவும், அதன் காரணமாக அந்தப் பெண்ணின் சொந்தக்காரர்கள் மேலே கண்ட அந்த 'மாபெருந் தலைவர்'களை, 'ஏனய்யா, உங்களைப் போன்றவர் எல்லாம் இதற்கு உடந்தையாக இருக்கலாமா?' என்று நடுவீதியில் கேட்டதாகவும் விசாரித்ததில் தெரியவருகிறது.

இதற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உள்ள சம்பந்தம் என்ன என்பதை மதுரை மக்கள்தான் கூறவேண்டும்.

3. 'தெற்கு வாசல் நாடார் வித்தியாசாலைத் தெருவிலுள்ள கருப்பையா என்பவர் தி. மு. கழகத்தைச் சேர்ந்த 'ரௌடி'களால் அடித்து மண்டை உடைக்கப்பட்டார்' என்பது மற்ருெரு குற்றச்சாட்டு; இதன் விவரங்களாவன :—

24—6—54-ல் நாடார் வித்தியாசாலைத் தெருவில் நடந்த பள்ளி ஆண்டு விழா நாடகத்தில் கருப்பையா என்பவர் பெண்கள் பகுதியில் உட்கார, ஒரு பையன், 'இந்தப் பக்கம் உட்காராதீர்கள்—பெண்கள் இருக்கிருர்கள்' என்று சொல்ல, அந்தப் பையனைக் கருப்பையா என்பவர் அடிக்க, பையனுக்குச் சொந்தக்காரர்கள் கருப்பையாவை அடிக்க, இரு சாராரும் போலீஸ் நிலையத்திற்குச் சென்று சமரசம் ஆகிவிட்டார்கள். இதற்கும் தி. மு. கழகத்திற்குப் என்ன சம்பந்தம்? மக்கள்தான் தீர்ப்பு கூறவேண்டும்.

4. 'ஹார்வி ஆலையின் வாயிற்படியில் பூக்கடை வைத்திருந்த சுப்பையாவை அடித்ததுமன்னியில் கடையையும் சூறையாடினர்' என்பது ஒரு குற்றச்சாட்டு.

'8—3—57 காலை ஆரப்பாளையம் லால்குடி - நடராசன் படிப்பகத்தில் படித்துக்கொண்டிருந்த தோழர்களைத் தாக்கி, அந்தப் பகுதியிலிருந்த ஐந்து தி. மு. க. கொடிகளையும் வெட்டி வீழ்த்தியதோடு, ஆரப்பாளையம் கிராஸ் ரோடிலுள்ள அருணசலம் எனும் தோழரின் சைக்கிள் கடையைத் தாக்கி நொறுக்கிவிட்டார்களே கம்யூனிஸ்டுகள் - இது நியாயமா?' என்று அழகாடியிலுள்ள பூக்கடை சுப்பையாவை சில தோழர்கள் கேட்க, இருவருக்கும் வாக்குவாதம் வந்தவுடன் பக்கத்திலுள்ள கடைக்காரர்கள் விலக்கிவிட்டிருக்க, கடையைத் தாக்கி, சூறையாடியதாகப் புளுகுவது பித்தலாட்டமல்லவா?

5. '1—4—57 இரவு சுமார் $12\frac{1}{2}$ மணிக்கு சூடாமணி என்பவரை மணி நகரத்திலும், சிதம்பரம், கதிரேசன் என்பவர்களை அழகாடியிலும் சிலர் வெட்டி காயப்படுத்திவிட்டனர்' என்பதாக ஒரு குற்றச்சாட்டு.

1—4—57-ம் தேதி இரவு மேலக் கோபுரத் தெருவில் நடந்த கச்சேரியைக் கேட்டுவிட்டு இரவு $12\frac{1}{2}$ மணிக்கு வீடு திரும்பிய தி-மு. க. அனுதாபிகளான அழகாடியைச் சேர்ந்த மூக்கன் என்பவரையும், பொன்னகரத்தைச் சார்ந்த அழகர் என்பவரையும் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த பூந்தோட்டம் பரமன், சூடாமணி என்ற இருவரும் மணி நகரத்தில் வழி மறித்து அரிவாளால் வெட்ட, மூக்கன் என்பவர் பயந்து ஓடிவிட்டார்; அழகர் என்பவரை சூடாமணி என்பவர் அரிவாளால் வெட்ட எத்தனிக்கும்போது, அழகர், அவருடைய அரிவாளைத் தட்டிவிட்டு இருவரும் கீழ்மேலாக உருண்டுகொண்டிருந்த சமயத்தில், பக்கத்தில் அரிவாளோடு நின்றுகொண்டிருந்த பரமன் (கம்யூனிஸ்டு) என்பவர் அழகரை வெட்ட, அந்த வெட்டு சூடாமணி காலிலும், அழகர் கையிலும் பட இருவரும் காயமடைந்தனர். பயந்து ஓடிய மூக்கன், அழகாடியில் தையற்கடை வைத்திருக்கும் கம்யூனிஸ்டு சிதம்பரத்திடம் சென்று, 'கச்சேரி கேட்டுவிட்டு வந்த என்னை உன் கட்சியைச் சேர்ந்த பரமனும், சூடாமணியும் வெட்ட வந்தார்களே என் ?' என்று கேட்க, இருவருக்கும் ஏற்பட்ட சச்சரவில் சிதம்பரம் காயமடைந்திருக்கிருர்; இந்தப் பொய்க் குற்றச்சாட்டுகள், தாங்கள் நடத்திவரும் இழிசெயல்களுக்குத் திரையாக்கப் பயன்படும் என்று கம்யூனிஸ்டுகள் எண்ணுகிருர்களா?

அடுத்து, கம்யூனிஸ்டுகள் தி. மு. கழகத் தோழர்கள்மீது நடத்திய வெறியாட்டச் செயல்களைக் கவனியுங்கள் :—

1. 22—2—57-ல் தேர்தல் வேலை செய்துகொண்டிருந்த நாடார் வித்தியாசாலைத் தெருவைச் சேர்ந்த தோழர் பேச்சிமுத்துவை ஐந்து கம்யூனிஸ்டுகள் சேர்ந்து தாக்கியதோடு, கடித்தும் காயப்படுத்திவிட்டார்கள்.

2. 9-3-57-ல், ஆரப்பாளையம் ரோடில், கடலை-மிட்டாய் வியாபாரம் செய்யும் தி. மு. கழகத் தோழர் சுந்தரராசனை பிச்சுவாளால் குத்தினர்கள்.

3. ஆரப்பாளையம் கிராஸ் ரோடில், அருணசலம் சைக்கிள் கடையைத் தாக்கி அழித்துவிட்டார்கள்.

4. அழகாடிதுரை என்பவர் காரில் வரும்பொழுது, வழிமறித்துத் தாக்க முயற்சித்தார்கள்.

5. புட்டுத்தோப்பு—பொன்னகரம் பிராட்வே பகுதியிலுள்ள தி. மு. கழகக் கொடிகள் ஐந்தை வெட்டி வீழ்த்தினர்கள்.

6. 9-3-57-ல், ஆரப்பாளையத்தில் உள்ள லால்குடி நடராசன் படிப்பகத்தைத் தாக்கி நொறுக்கியதுடன், தலைவர்கள் படத்தையும் சேதப்படுத்தினர்கள்.

7. 9—3—57ல், திருப்பரங்குன்றம் ரோடிலுள்ள ஒட்டுச்சாவடிக்கு முன்னுள் போடப்பட்டிருந்த தி. மு. க. பந்தலை நெருப்பு வைத்துக்கொளுத்தினர்கள்.

8. 19—3—57 இரவு, சிம்மக்கல்லில் தி. மு. க. தலைவர்கள் வெற்றி விழா நிகழ்ச்சியைக் கொண்டாடும்போது அண்ணு, கருணாநிதி ஆகியோர் உருவப் படங்களை உடைத்துத் தூளாக்கினர்.

9. 20—3—57ல், தேர்தலில் நமக்காகப் பணியாற்றிய குப்புபிள்ளை தோப்பு-ஷெரீப் என்பவரைத் தாக்கினர்.

10. 23—3—57ல், குயவர் பாளையத்தில், நமக்குத் தேர்தல் பணியாற்றிய மணிநகாம் பாலு என்பவரை, கத்தியால் முதுகில் குத்திக் காயப்படுத்தினர்.

11. 1—4—57ல், மேலக் கோபுரத் தெருவில் கச்சேரி பார்த்துவிட்டு இரவு $12\frac{1}{2}$ மணிக்கு வீடு சென்ற பொன்னகரத்தைச் சேர்ந்த அழகரையும், அழகாடியைச் சேர்ந்த மூக்கனையும் தாக்கி அரிவாளால் வெட்டி விரட்டிப் படுகாயப்படுத்தினர்.

12. 2—4—57ல், தேவி டாக்கீசிற்கு எதிரில், இரவு 8 மணிக்கு அழகாடி மீனுட்சிசுந்தரத்தையும், மணிநகாம் துக்கமுத்துவையும் அரிவாளால் வெட்டி படுகாயப்படுத்தினர்.

13. 3—4—57ல், சுமார் இரவு 8 மணிக்கு இராஜேந்திரா தெருவில் ஆசீர்வாதம் கடைக்குள் புகுந்து ஆசீர்வாதத்தையும், அவருடைய மைத்துனர் சுப்பையாவையும் அரிவாளால் வெட்டிக் கத்தியால் குத்தியதுமன்னியில், கடையிலிருந்த 150 ரூபாயையும் எடுத்துச் சென்றுவிட்டனர்.

14. 3—4—57ல், இராஜேந்திரா தெருவில் உள்ள இரண்டு தி. மு. கழக கொடிமரங்களை வெட்டி வீழ்த்திவிட்டனர்.

15. 4-4-57 காலை 6 மணியளவில், அழகாடியைச் சேர்ந்த பெருமாள் என்பவரை, பாண்டியன் ஆலைக்கு வேலைக்குச் செல்லுகையில், குயவர்பாளையத்தில் வழிமறித்து இரண்டு கைகளிலும் இரண்டு கால்களிலும் பலமாக வெட்டிப் படுகாயப்படுத்திவிட்டனர்.

இவையெல்லாம், இந்நகரிலே தான் நடைபெற்றுள்ளன. இத்தனை கொடிய அக்கிரமங்கள் செய்த கம்யூனிஸ்டுகள், தங்களுடைய பாரம்பரைப் பலாத்காரச் செயல்களை மறைப்பதற்காக, கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு என்ற இலட்சியத்துடன்வளர்ந்து வரும் தி. மு. கழகத்தின்மீது பொய்யான குற்றம் சுமத்தி, அவர்களின் 'அராஜகத்தை' மறைக்க முயல்கிருர்கள். நியாயம் வழங்கவேண்டிய பொறுப்பை மதுரை பொதுமக்களிடம் விட்டுவிடுகிருேம்.

எந்தத் 'தொழிலாளி - பாட்டாளி வர்க்க'த்திற்குப் பாடுபடுவோமென உரத்த குரலில் கூவுகிருர்களோ, அந்தத் தொழிலாளி - பாட்டாளி மக்களை வெட்டி வீழ்த்திவிட்டு, அவர்களது பரம்பரையை ஒழித்துவிட்டு, எந்த இடுகாட்டில் தங்கள் பொதுவுடைமையைக் காணப்போகிருர்களோ இந்தக் கம்யூனிஸ்டுகள் ?

இனியேனும், நீதி-நியாயத்திற்குக் கட்டுப்பட்டு, மனிதத்தன்மையையும், உயிரின் சிறப்பையும் உணர்ந்து, நேரிய வழியில் நடக்க முன்வருவார்களென எதிர்பார்க்கிறேன்.

நன்றியறிவிப்பு

பொள்ளாச்சி (பொது) தொகுதிக்கு தி. மு. கழகச் சார்பில் போட்டியிட்ட எனக்கு ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள்—கழகத்தின்பால் நல்லெண்ணம்கொண்ட பொதுமக்கள்—வால்பாறைப் பகுதியிலுள்ள தொழிலாளத் தோழர்கள் பலரும் தாங்களாக்வே முன்வந்து, தங்களுக்கேற்பட்ட எவ்வித இடையூறுகளையும் பொருட்படுத்தாமல் பணியாற்றி வாக்காளர்களின் பேராதரவைத் திரட்டித்தந்ததால், உடனடியாகப் பல கிராமங்களில் புதிதாகக் கிளைக் கழகங்கள் தோன்றவும், கழகம் வலுப்பெறவுமான சூழ்நிலை உண்டாக்கியிருக்கிறது.

இத்தகைய நல்வாய்ப்புக்கு ஆதரவு தந்த வாக்காளர் பெருமக்களையும், கழகத் தோழர்களையும் தொடர்ந்து பணியாற்ற அழைப்பதோடு, இந்த நல்லவர்களுக்கு—நாட்டுப் பற்றுள்ளவர்களுக்கு நான் எனது சார்பிலும், என்னேடு (தனித் தொகுதிக்கு) இணைந்து நின்று போட்டியிட்ட தோழர் இ. இராமசாமி அவர்கள் சார்பிலும் பணிவான வணக்கத்தையும்—நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்,

அ. ச. பாலு

★

தாரமங்கலம் தொகுதியில் கழகச் சார்பில் போட்டியிட்டேன்.

வெற்றி தோல்வி பற்றி கவலைப்படாமல், சனநாயகக் கடமையாற்றும் பணியினை மேற்கொண்டு, கழகத்தின் கொள்கையை விரிந்த அளவு பரப்ப, நம்மைப்பற்றி-நமது கொள்கைகளைப்பற்றி புரியாதோர்புரிந்துகொள்ள கழகத் தோழர்களும்—ஆதரவாளர்களும்—வாக்காளர்களும், அரசியல் நாகரிகம் வழுவாமல், கண்ணியமுடனும், பொறுப்புணர்ச்சியோடும் கொள்கைவழி நின்று பணியாற்றியதற்கு என் இதயங் கனிந்த நன்றியையும்—வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்,

கே. எஸ். சின்னப்பன்

★

டில்லி மக்கள் சபைக்குக் நாகப்பட்டினம் தனித் தொகுதியில் போட்டியிட்ட எனக்கு ஆதரவு தந்து வாக்களித்த பழங்குடி மக்கள், முஸ்லீம் பெருங்குடி மக்கள், கிறித்துவப் பெரியோர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள்பால் உண்மையான அன்புள்ள மற்றவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் வெற்றி பெற வேண்டுமென்று பழங்குடி சமூக சகோதரர்கள் சதா கவலையுடன் வேலை செய்தனர். நூற்றுக்கணக்கான பேர் எனக்காக தங்கள் சொந்த செலவிலேயே தேர்தல் வேலை செய்தார்கள். அவர்கள் என் மீது கொண்ட அன்புக்கும் சமூகப் பற்றுக்கும் நன்றி செலுத்துகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் என் மீது அன்புகொண்டு எனக்கு ஆதரவு தந்தது. அந்த ஆதரவை தக்க சமயத்தில் சரியானபடி பயன்படுத்திக் கொள்ளவில்லை என்ருலும் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் எனக்காக அன்புடன் வேலை செய்தார்கள். அவர்கள் அனைவருக்கும் நான் எனது மனமார்ந்த நன்றியை செலுத்திக்கொள்கிறேன்.

அன்பன்

வ. வீராசாமி

★

மன்னூர்குடி தொகுதியில் சென்னை சட்டசபைக்குப் போட்டியிட்ட எனக்கு, இன்னல் பல ஏற்று, ஆங்காங்கே பல புதியக் கிளைகள் ஏற்படுத்தி கழகத்திற்கு நல்லதொரு ஆதரவை தேடித் தந்த கழகத் தோழர்களுக்கும், மன்னூர்குடி கே. வி. கே. சாமி மன்றத்தாருக்கும், நிதி உதவி அளித்த தோழர்கட்கும் — குறிப்பாக சிங்கைத் தோழர்கட்கும், பொதுமக்களுக்கும் எனது நன்றி !

'உதயசூரியன்' பெட்டியில் தங்களது வாக்குகளை அளித்த பெரியோர்களுக்கும்- தாய்மார்களுக்கும் — தோழர்களுக்கும் எனது அன்புகலந்த வணக்கம்.

இந்நாட்டிற்கும் - நமதியக்கத்திற்கும் தொடர்ந்து அனைவரும் விடாமுயற்சியுடனும் கடமை - கண்ணியம் — கட்டுப்பாடுடன் உழைக்க வேண்டுவதுடன், நானும் இரவு — பகல் என பாராது உழைப்பேன் என்று உறுதி கூறுகின்றேன்.

அன்பன்

என். அருணசலம்

★

பல்லடம் தொகுதிக்கு தி. மு. கழகச் சார்பில் போட்டியிட்ட எனக்கு, பலகஷ்டங்களை ஏற்றுப் பணியாற்றிய தோழர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், பொது மக்களுக்கும் எனது இதயம் கனிந்த வணக்கத்துடன் நன்றியையும் தெரிவித்துக்கொள்வதுடன் கண்ணியம் வளரவேண்டும் — ஜனநாயகம் ஓங்கவேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு, எனக்கு வாக்களித்த வாக்காளர் பெருமக்களுக்கும் என் உளமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்

பல்லடம் பொன்னுசாமி

‘ஐயத்திற்கு இடமளிப்பதாக குற்றச்சாட்டுகள் உள்ளன’

ஏ. கோவிந்தசாமி உள்ளிட்ட கழகத் தோழர்கள் அனைவரும் விடுதலை

கடலூரில் 1956 பிப். 20-ல் கலகம் விளைவித்ததாக தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி தீர்ப்பு

கடலூர், ஏப். 15—

சென்ற ஆண்டில் நடைபெற்ற பிப். 20 பொது வேலை நிறுத்தம்—கடையடைப்பின்போது கடலூரில் கலகம் செய்ததாக தென்னாற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கில் ஏப். 12-ந் தேதியன்று விடுதலை செய்யப்பட்டார்.

வழக்கை விசாரித்த கடலூர் சப்-மாஜிஸ்திரேட் கபூர் அவர்கள், “குற்றச்சாட்டுகள் மன நிறைவு அளிக்கும்வகையில் நிரூபிக்கப்படவில்லை. சாட்சிகள் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் கூறியுள்ளனர். குற்றம் நடந்தது ஐயத்திற்கு இடமளிக்கும் வகையில் இருப்பதாக உள்ளதால் அனைவரையும் விடுதலை செய்கிறேன்” என்று, தனது தீர்ப்பில் கூறியிருக்கிறார்.

வழக்கு விவரம்

சென்ற ஆண்டு பிப்ரவரி 20-ம் நாளன்று நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்தின்போது, கடலூரில் ஆறுமுகம் என்பவரது பூக்கடையிலிருந்து ரொக்கமாக ரூ. 166-10-6 கொள்ளையடித்ததாகவும், கடையிலிருந்து ரூ. 800 பெறுமான சொத்துக்களுக்கு நாசம் விளைவித்ததாகவும் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் மற்றும் எழுவர் மீது போலீசாரால் வழக்கு தொடரப்பட்டது.

சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் மேற்கண்டவாறு தொடரப்பட்ட வழக்கில் நீதிபதியவர்கள், கொள்ளையடித்ததாக உள்ள குற்றச்சாட்டை நீக்கிவிட்டு, மற்ற குற்றச்சாட்டுக்களைப் பற்றி விசாரணை ஆரம்பித்தார்.

போலீச தரப்பில் ஆட்சேபம் கிளப்பப்பட்டு கொள்ளையடித்ததாக உள்ள குற்றச்சாட்டையும் விசாரணை செய்யவற்புறுத்தப்பட்டது. அது சென்னை உயர்நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்யப்பட்டு, உயர் நீதிமன்றம் கொள்ளையடித்தக் குற்றத்தை நீக்கி மற்ற குற்றச் சாட்டை விசாரணை செய்யும்படி ஆணையிட்டது.

அதன்படி கொள்ளையடித்தக் குற்றச்சாட்டை நீக்கி மற்றக் குற்றச்சாட்டின்மீது விசாரணை நடைபெற்று, முடிவாக நின்று மேற்கண்டவாறு தீர்ப்புக்கூறி அனைவரும் விடுதலை செய்யப்பட்டார்கள்.

தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் மற்றும் எழுவரின் சார்பில் வழக்கறிஞர்கள் கடலூர் எஸ். பார்த்தசாரதி, சென்னை என். வேணுகோபல், இராசா சிதம்பரம், சௌந்திரராசன் முதலியோர் வாதாடினார்கள்.

சென்னை சட்டசபை உப தேர்தல்

தேதி அறிவிப்பு

புதுடில்லி, ஏப். 15—

சேலம் மாவட்டம் ஏற்காடு மலை சாதியினர் தொகுதியிலிருந்து சென்னை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டி கவுண்டர் என்பவர் இயற்கையெய்தியதால் ஏற்பட்ட காலியான இடத்திற்கு உறுப்பினரொருவரைத் தேர்ந்தெடுக்கும்படி தேர்தல் குழு கேட்டுக்கொண்டிருக்கிறது.

அபேட்சை பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கான கடைசி நாள்: ஏப். 22; பரிசீலனை: ஏப். 25; வாபஸ் பெறுவதற்கான இறுதி நாள்: ஏப். 29. தேர்தல் நடைபெறும் நாள்: மே 27.

மறைந்துவந்த சாதி மனப்பான்மை

‘பொதுத் தேர்தல் மூலம் புத்துயிர் பெற்றுவிட்டது’

விநோபாவின் கண்டனம்

திருவனந்தபுரம், ஏப். 15—

“சிறிது சிறிதாக இந்தியாவில் மறைந்துவந்த சாதி மனப்பான்மை, நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் மீண்டும் புத்துயிர் பெற்றுவிட்டது. எனவே, தேர்தல்களைச் சிறந்த முறையில் நடத்துவதற்கான வழிகள் கண்டறியப்பட வேண்டும்” என்று, ஆச்சார்ய விநோபா பாவே அவர்கள் கூறியுள்ளார்.

கதர் தொழிலுக்கு மேலும் பண உதவி!

இந்தியசர்க்கார் தாராளம்

புதுடில்லி, ஏப். 12—

கதர்—கிராமத் தொழில் குழுவின் அபிவிருத்தித் திட்டங்களை அமுல் செய்வதற்கு இந்திய அரசாங்கம் ரூ. 3,72,00,000 அளித்துள்ளது.

1957—58-ல் முதல் தவணையாக ரூ. 2,13,75,000 கிராமத் தொழிலுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது; இதில் ரூ. 1,12,50,000 மானியமாகவும், ரூ. 1,01,25,000 கடனாகவும் தரப்படுமாம்.

இராட்டைத் தொழில் முன்னேற்றத்திற்கு ரூ. 1,57,87,500 அனுமதிக்கப்பட்டுள்ளது; இதில் ரூ. 92,50,000 மானியமாகவும், ரூ. 63,,75,000 கடனாகவும் தரப்பட்டுள்ளது.

1957—58-ல் அம்பர் சர்க்கா திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நிதியை, தனிப்பட்ட முறையில் ஒதுக்கியுள்ளனர் என்று தெரியவருகிறது.

கழகக் கூட்டம்

★

திண்டுக்கல்:

சோலை ஹால் திடல்

16—4—57 மாலை 7-மணிக்கு

பேசுவோர்;

என். வி. நடராசன்

பி. சமதர்மம்

குளித்தலையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யோர் மனம் திறந்து வெற்றி தோல்விகள் குறித்து விளக்கம் தந்தார்கள்.

அத்துடன் பகல் உணவுக்காக இரண்டு மணி அளவில் கூட்டம் கலைந்தது.

இடைவேளை

பகல் உணவு, கூட்டம் நடைபெற்ற மடத்திலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சிறிது நேர இடைவேளைக்குப் பின், மாலை 3-30 மணியளவில் கூட்டம் மீண்டும் துவங்கியது.

தேர்தல் நிலைகள் குறித்து, தோழர்கள் இளவரசு (சென்னை), உசேன் (பெங்களூர்), ஈ. வெ. கி. சம்பத் (கோவை), சுப்பிரமணியம் (நாஞ்சில்) ஆகியோர் கருத்தறிவித்தனர்.

பின்னர், பொதுச்செயலாளர் அவர்கள் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களைத் தொகுத்து வகுத்து எதிர்காலத்தில் தி. மு. கழகம் மேற்கொள்ளவேண்டிய செயல் முறைகள் பற்றி எடுத்துரைத்தார்.

தேர்தலுக்குப் பிறகு கழகத்திற்கு ஏற்பட்டுள்ள வளர்ச்சி குறித்தும், இந்த வளர்ச்சியை முறையானதாகவும் ஒழுங்கானதாகவும், நிரந்தரமானதாகவும் ஆக்க மாவட்டக் கழகங்களும், கிளைக் கழகங்களும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி எடுத்துரைத்தார்கள்.

அடுத்து தீர்மானங்கள் விவாதத்திற்கு வந்தன. தோழர்கள் புதுவை-ஆர். எஸ். பாண்டியன் அ. பொன்னம்பலனார், மு. கருணாநிதி, எஸ். முத்து, காஞ்சி-கல்யாணசுந்தரம், எம். எஸ். இராமசாமி, அரங்கண்ணல், ஜி. பி. சோமசுந்தரம், நாவமார்க்கண்டேயன், முத்துக்கருப்பன் முதலியோர் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

பின்னர் தீர்மானங்கள் பலவும் நிறைவேற்றப்பட்டன.

பொதுச்செயலாளர் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை, குளித்தலைத் தோழர்களும் திருச்சி மாவட்டத் தோழர்களும், தோழர் மு. கருணாநிதி அவர்களின் மேற்பார்வையில் சிறப்புடன் செய்திருந்தனர்.

பெங்களூர்-சேலம் இரயில்பாதை அமையுமா?

சென்னை, ஏப். 11—

பெங்களூரிலிருந்து சேலத்திற்கு இரயில் பாதை அமைக்கும் வேலை, இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாம்.

இதற்கான பூர்வாங்க வேலைகளும், துப்புறவும் முடிந்துவிட்டதாம்.

செங்கற்பட்டிலிருந்து சின்ன சேலம் வரையில் இரயில்பாதை அமைப்புக்கான துப்புறவு வேலை தீவிரமாக நடைபெற்று வருகிறதாம்.

கடலூரில்

தி.மு.க.சட்டசபை - பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வரவேற்பு

17-4-57 மாலை 5-30 மணிக்கு கடலூர் நகர தி. மு. கழகச் சார்பில், மஞ்சை நகர் திடலில், கழக சட்டமன்ற—பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாபெரும் வரவேற்புப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

தோழர் ஏ. ஆர். தாமோதரன் தலைமை வகிப்பார்; அண்ணு, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், மற்றும் கழக சட்டமன்ற—பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்வர்.

வழக்கறிஞர் இரெ. இளம்வழுதி அவர்கள் வரவேற்புரையும் கடலூர் நகரத் தொகுதி வாக்காளர்களுக்கு நன்றி உரையும் வழங்குவார்.

மாலை 4-மணியளவில் திருப்பாப்புலியூர் புகைவண்டி நிலையத்திலிருந்து தோழர் கே. எம். வேலு தலைமையில் ஓர் மாபெரும் ஊர்வலம் நடைபெறும்.

அ. பொன்னம்பலனார்

மலாய் நாட்டுப் பயணம்

★

மலாய் நாட்டுத் தோழர்களின் அன்பழைப்பை ஏற்றுக் கொண்டு, தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள், 21—5—57-ல், சென்னையிலிருந்து புறப்படும் ‘எஸ். எஸ். ரஜூலா’ என்ற கப்பலில் மலாய் நாட்டிற்குப் பயணமாகிறார்.

சிங்கப்பூர், பினாங்கு, சிரம்பான், கோலாலம்பூர், மூவார், ஈப்போ, மலாகா ஆகிய இடங்களில் தோழர்களின் விருந்தினராகத் தங்கியிருந்து, வாய்ப்புகள் கிடைக்கும் நேரத்தில் பகுத்தறிவுப் பணியாற்றுவார்; வள்ளுவர் வகுத்துத் தந்த திருக்குறள் நெறி முறைகளைப் பரப்புவார்; மலாய் நாட்டின் பல பகுதிகளிலும் வாழும் தமிழர்களின் முன்னேற்றத்திற்கான துறையில் அறிவுப் பணிகளாற்றிய பின் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் தாயகம் திரும்பக்கூடும்.

20—5—57 வரை தோழர்கள் எழுதும் அஞ்சல்கள், கீழ்க்காணும் முகவரிக்கு எழுதுமாறு கோரப்படுகிறார்கள் :—

அ. பொன்னம்பலனார்,
எம். ஜி. ஆர். நாடக மன்றம்,
எண் 160, லாயிட்ஸ் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை-14.

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

ஏப். 16 : பவானி
17 : காலை — கொளத்தூர் (மேட்டூர் அணை)
மாலை—கடலூர்
18 : மண்ணச்சநல்லூர்
19 : அறந்தாங்கி

அ. பொன்னம்பலனார்

சுற்றுப்பயணம்

ஏப். 16 : பெரம்பலூர்
17 : நெல்லிக்குப்பம்
18 : விருத்தாசலம்
19 : தம்பம்பட்டி
20 : ஆரணி (வ. ஆ.)
21 : சென்னை

திருமணங்கள்

17—4—57 காலை 8 மணியளவில், நாகப்பட்டினம்—அரியபுத்திரப் பிள்ளைத் தெருவில் நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் வி. சங்கையன்—தோழியர் அமராவதி வாழ்க்கை ஒப்பந்த விழா மணமகள் இல்லத்தில் நடைபெறும்.

18—4—57 மாலை 5-30 மணிக்கு, மாயூரம் இரயிலடி வியாபாரச் செட்டித் தெரு 44-ம் எண் இல்லத்தில், தோழர் எஸ். கருணானந்தம் தலைமையில் மணமக்களுக்கு வரவேற்பு-வாழ்த்து விழா நடைபெறும். தோழர்கள் என். எஸ். இளங்கோ, ஜி. கிருஷ்ணமூர்த்தி, என். கிட்டப்பா, ஆர். ஜோசப் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

*　　*　　*

17—4—57 காலை 9-30 மணிக்கு மேட்டூர்—கொளத்தூர் தோழர் ஏ.இராமலிங்கம்—சாயாதேவி வாழ்க்கை ஒப்பந்த விழா மணமகள் இல்லத்தில் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் தலைமையில் நடைபெறும். தோழர் க. அன்பழகன் வாழ்த்துரை வழங்குவார்.

பொதுத் தேர்தல்

செல்லத்தக்கது அல்லவாம்!

நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படுமாம்!

சமீபத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தல்கள் சட்டப்படி செல்லத்தக்கவையா என்பது பற்றி சோஷலிஸ்டுக் கட்சி விரைவில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் போவதாக டாக்டர் ராம் மனோகர் லோகியா கூறியுள்ளார்.

‘தேர்தல் குழுவினால் தயாரிக்கப்பட்ட தேர்தல் விதிகள் அரசியல் சட்டத்திற்கு முரணானவை; பொதுத் தேர்தல்கள் சட்டவிரோதமானவை — செல்லத்தக்கவை அல்ல; இதுபற்றி சட்ட நிபுணர்களுடன் சோஷலிஸ்டுக் கட்சி கலந்தாலோசித்து வருகிறது’ என்றெல்லாம் அவர் கூறியுள்ளார்.

திருவாடானை தொகுதி சட்டசபை உறுப்பினர்

தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாதென மனு தாக்கல்

சென்னை, ஏப். 15—

சென்னை சட்டசபைக்கு இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை தொகுதியிலிருந்து சுயேட்சை அபேட்சகர் கே. ஆர். கரியமாணிக்கம் அம்பலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்துத் தேர்தல் குழுவிடம், அத்தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகர் எஸ். இராமகிருஷ்ணத்தேவர் மனு ஒன்று தாக்கல் செய்துள்ளார். அத்தொகுதியில் 5 பேர் போட்டியிட்டனர்.

மறைவு

பூந்தமல்லி காட்டுப்பாக்கம் தி. மு. க. தோழர் நடராசன் 23—3—57 மாலை 7 மணிக்கு, மாரடைப்பினால் இயற்கையெய்தியதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். 24—3—57ல் நடைபெற்ற சவ அடக்கத்தில் பூந்தமல்லி வட்டாரக் கிளைகளைச் சேர்ந்த தோழர்கள் அனைவரும் கலந்துகொண்டு தங்களின் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டனர். நமது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக. —(ஆ - ர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.